# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்
# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 14வது கூட்டம் 21 – 03 -2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 6:30 மணிக்கு பங்குத் தந்தையின் ஆரம்பசெபத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் திரு. விஜயகுமார் அகஸ்ரின், திரு. ஜஸ்ரின் ஜீவானந்தம் ஆகியோர் சமூகம் தரவில்லை. திரு. விஜயகுமார் அகஸ்ரின் அவர்களுக்குப் பதிலாக திரு. வெனாசியஸ் அவர்கள் சமூகம் தந்திருந்தார். கடந்தமாத கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. கூட்ட அறிக்கையை திரு. அலெக்ஸ் அவர்கள் முன்மொழிய திரு. யூலியன் அவர்கள் வழிமொழிந்தார். மேலும், பரிசுத்தவார நிகழ்வுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. குருத்தோலை ஞாயிறு வழமைபோல் இளைஞர்கள் செய்வார்கள் என்றும், பெரியவியாழன் அலங்கார அமைப்பை வழமையானவர்கள் செய்வார்கள் என்றும் அன்றைய வழிபாடுகள் 11மணிவரை நன்றாக சிறப்பிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பெரியவெள்ளி மேற்கொள்ள இருக்கும் யேசுவின் பாடுகள் காட்சித் தியானமானது 1:30 மணிநேரம் செய்யப்படவேண்டும் என்றும் அந்தத் தியானம் நன்றாக அமைய வேண்டும் என்றும், அதற்கு இசைக்கருவிகள் ஏனைய நடைமுறை விபரங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இயேசுவின் காட்சிக்கு ஒருவர் வேலை சம்பந்தமாக சமூகம் தராதவிடத்து, ரொறன்ரோவில் கலந்து கொண்டவரை அதற்கு அழைத்துக் கொள்வது நல்லது என்றும் தீர்மானிக்கப்பட்டது. திரு. அம்புறோஸ் அவர்களிடம் video projection அத்தோடு அதில்வரும் பாடற்காட்சி என்பன பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இது சமய வெளிப்பாடுகள் வெளிச் செல்லக்கூடிய ஒரு நல்ல முறை என்பதால் திருமறைக்கலாமன்ற கிளை ஒன்றினை மொன்றியலில் ஏற்படுத்துவது நல்லது என்று பங்குத்தந்தை அவர்கள் தெரிவித்தார். அதற்கு அவர்களுடைய கட்டுப்பாடுகள் கோட்பாடுகள் என்பவற்றை அறிந்து, எங்களுடைய வழி வகைகளும் எவ்வாறு அமைந்தால் அதனை எதிர்வரும் காலங்களுக்குச் செய்யலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது,

இயேசுவின் பாடுகள் தியானக்காட்சி முதன்முதலாக எமது மறைத்தளத்தில் செய்யு முகமாக இதைப்பற்றிய ஓர் அபிப்பிராயம் மக்களிடையே ஏற்படும் வேளை, அதனை அவர்களுக்கு விளக்கு முகமாக, இது ஒரு பாடுகளின் தியானம் என்பதைப்பற்றி எடுத்துச் சொல்லவும் அத்தோடு இத்தியானம் பற்றி அறிவித்தலில் பங்கு மக்களுக்கு இன்னு மொருமுறை கொடுப்பது நல்லது என்றும், பிறசபைகளுக்கும் அறிவித்தல் வேண்டுமானால் கொடுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு திருப்பலியானது ஞாயிற்றுக்கிழமை 11:30 மணிக்கு இடம்பெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. எமது ஆலயத்தில் சில மாற்றங்களை எங்களுடைய கலாச்சாரத்திற்கு அமைவாக செய்வதற்கு ஆயர் இல்லத்தில் இருந்து பார்வையிட வந்தவர்கள் எங்களுடைய கலாச்சார முறையில் அமைவது நல்லது, ஆனால் இந்த ஆலயம் கிறிஸ்த்து அரசர் ஆலயம் என்றும், அதன் ஒவ்வொரு தூண்களும் ஒளிச்சுடர்போல் செல்கின்றது என்றும் கூறிச்சென்றதாக பங்குத்தந்தை கூறினார்.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 21-03-2010

# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்
# Our Lady of Deliverance Tamil Catholic Mission

எமது மீட்பின் அன்னை மறைத்தளத்தை எங்களுக்கென்று உரிமையாக்கிக்கொள்ள எமது பங்கு மக்களாகிய ஒவ்வொரு உள்ளங்களும் முன்னின்று உதவியதை முன்னிட்டு அவர்களுடைய பெயர்களை பொறித்துக் கொள்வது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது. அவ்வாறு பெயர்களை பொறித்துக் கொள்வது மற்றவர்களின் மனங்களை புண்படுத்துவதாக அமைவதால் அதனை தவிர்த்துக் கொள்வது நல்லது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கருத்தை நிர்வாக சபைக்குத் தெரிவிக்கும்படி திரு. வெனாசியஸ் அவர்களுக்கும் கூறப்பட்டது.

எமது ஆலயத்திற்கு இனிவரும் காலங்களில் எங்களுடைய தேவைகள், கடமைகள், நோக்கங்கள் என்பவற்றை அடிப்படையாக நோக்குமிடத்து எமது மீட்பின் அன்னை மறைத்தளத்திற்கு ஒரு குருவானவருடைய முழுமையான சேவை தேவைப்படுகின்றது என்றும், புதிய குருவானவர் விபரம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. ஆலய மண்டப வாடகை விபரங்கள் பொறுப்பினை பங்குத்தந்தை பொறுப்பேற்றுச் செய்வதாக தீர்மானிக்கப்பட்டது. முதல் நன்மை பெறும் மாணவர்களுக்கு மூன்று மொழிகளிலும் பாடம் கற்றுக் கொடுப்பது என்றும் அதே நேரம் அவர்கள் பங்கெடுக்கும் நேரம் 1மணி நேரம் என்ற காரணத்தால் அவர்களுக்கு கடினமானதாக இருக்கும் என்றும் இனிவரும் வகுப்புக்களில் அவற்றை இலகுவாக்கும் வழிகள் செய்யப்படும் என்றும் திரு. அம்புறோஸ் அவர்கள் தெரிவித்தார். ஆலய மண்டபம் வாடகைக்கு இரவு 1மணிவரை மட்டும் வழங்கப்படும், மேலும் அதிக நேரம் தேவைப்படின் சிறிய மண்டபத்துக்கு 75டொலர்கள் என்றும் பெரிய மண்டபத்துக்கு 150 டொலர்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் திரு. அமிர்தநாதர் அவர்களின் இறுதிச்செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 21-03-2010**